நகராட்சி அலுவலகம்,
களக்காடு.

நாள். 26.08.2022.

களக்காடு நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2022ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 30ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறும்.

**முன்னிலை: திருமதி. கா. சாந்தி, எம்.ஏ., பி.எட்.,**
**நகர்மன்ற தலைவர்**
**களக்காடு நகராட்சி.**

<table>
<tr><th>நாள்.</th><th>தீர்மான எண்.</th><th>மன்ற பொருள்</th><th>மன்றத்தின் முடிவு</th></tr>
<tr><td>30.08.22</td><td>138</td><td>
<u>பொருள் எண். 01</u><br><br>
களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகள் மற்றும் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இறந்தவர்களின் விபரங்கள் ஆகியவற்றை 07/2022 ஆம் மாதத்தில் பதிவு செய்த விபரம் மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.<br><br>
<table>
<tr><th rowspan="2">வ. எண்.</th><th rowspan="2">மாதம்</th><th colspan="3">பிறப்பு</th><th colspan="3">இறப்பு</th><th colspan="3">இறந்து பிறந்தவை</th></tr>
<tr><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th><th>ஆண்</th><th>பெண்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td>1</td><td>ஜூலை</td><td>57</td><td>45</td><td>102</td><td>11</td><td>7</td><td>18</td><td>0</td><td>0</td><td>0</td></tr>
</table>
</td><td>பார்வையிடப் பட்டது.</td></tr>
<tr><td>30.08.22</td><td>139</td><td>
<u>பொருள் எண். 02</u><br><br>
களக்காடு நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி, தூய்மை இந்தியா திட்டம் 2.0 (SBM (U) 2.0) திட்டத்தின் கீழ் மத்திய அரசு பங்குத் தொகை ரூ. 28.75 இலட்சம், மாநில அரசு பங்குத் தொகை ரூ. 18.98 இலட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ. 9.78 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 57.50 இலட்சம் மதிப்பீட்டில் களக்காடு நகராட்சியில் இரண்டு நுண்ணுயிர் உரக்குடில்கள் (Micro Compost Centre) (மொத்த கொள்ளளவு 5 TPD) அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வரப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கு.
</td><td>பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ. இலட்சம்</th><th>ஒதுக்கீடு செய்த தொகை ரூ. இலட்சம்</th><th>15வது மத்திய நிதிக்குழு திடக்கழிவு மேலாண்மை ஒதுக்கீடு அல்லது பொது நிதி</th></tr>
<tr><td>1.</td><td>சிதம்பராபுரம் மயானத்தில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் நுண்ணுயிர் உரக்குடில் (Micro Compost Centre) 3 TPD கட்டும் பணி.</td><td>50.00</td><td>34.50</td><td>15.50</td></tr>
<tr><td>2.</td><td>கீழப்பத்தையில் நுண்ணுயிர் உரக்குடில் (Micro Compost Centre) 2 TPD கட்டும் பணி.</td><td>40.00</td><td>23.00</td><td>17.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2022–2023 ஆம் ஆண்டிற்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வீடுகள் தோறும் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை நுண்ணுயிர் உரக்குடில் அமைத்து உரமாக்குவதற்கு மத்திய அரசு, மாநில அரசு மற்றும் நகராட்சி பங்குத் தொகை உட்பட சிதம்பராபுரம் பகுதிக்கு ரூ. 34.50 இலட்சமும், கீழப்பத்தை பகுதிக்கு ரூ. 23.00 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது திருத்திய மதிப்பீட்டின்படி, மேற்படி பணிக்கு கூடுதலாக சிதம்பராபுரம் பகுதிக்கு ரூ. 15.50 இலட்சம் மற்றும் கீழப்பத்தை பகுதிக்கு ரூ. 17.00 இலட்சம் பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் கூடுதல் செலவு தொகையினை 15வது மத்திய நிதிக்குழு திடக்கழிவு மேலாண்மை ஒதுக்கீடு அல்லது பொது நிதியிலிருந்து பணிகள் செய்ய அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.22</td>
<td>140</td>
<td>
<u>பொருள் எண். 3</u>
களக்காடு நகராட்சியில் அலுவலக பணியாளர்கள் மற்றும் நகர்மன்ற கூட்ட அரங்கிற்கு போதிய இடவசதியில்லாததால், களக்காடு நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண். 34ன்படி கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு அறிவிப்புகள் 2022–2023 ஆம் ஆண்டுக்கு பணி செய்ய அதற்கான நிதியினை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நகராட்சிகளுக்கு சிறப்புநிதியாக ஒதுக்கப்பட்ட ரூ. 200.00 இலட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும், மேலும், சென்னை
</td>
<td>திரு. ஜெ. ஜான்சன்துரை என்பவரது ஒப்பந்தப் புள்ளியினை அங்கீகரித்து அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 7628/2022/MA1, நாள். 08.06.2022ன்படி ரூ. 50.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டிட மதிப்பீட்டிற்கு மண்டல பொறியாளர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 2095/2022/ஆ1, நாள்.25.07.2022ன்படி, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பெற்று, 10.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்து தகுந்த மதிப்பீடு வழங்கிய ஒப்பந்ததாருக்கு பணி ஆணை வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி கொடுத்த ஒப்பந்தகார ர் பெயர்</th><th>மதிப்பீ டு ( ரூ. லட்சத் தில்)</th><th>மதிப்பீட்டினை விட கூடுதல்/ குறைவு (சதவீதத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.</td><td>திரு. ஜான்சன் துரை</td><td>50.00</td><td>மதிப்பீட்டின் விலைக்கு</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிக்கான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, அதில் திரு. ஜெ. ஜான்சன்துரை என்பவரின் ஆவணங்கள் தொழில்நுட்ப தகுதி பெறப்பட்டுள்ளது. அன்னாரின் விலைப்புள்ளியினை திட்ட மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்ததில், விலைப்புள்ளியினை திட்ட மதிப்பீட்டிற்கே செய்யக் கொடுத்துள்ளார். அவருக்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.22</td>
<td>141</td>
<td>
<u>பொருள் எண். 04</u>
களக்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தில் பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளான சாலை, குடிநீர், சிறுபாலங்கள், வடிகால் மற்றும் பொது சுகாதார பணிகள் செய்வதற்கு கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
</table>
</td>
<td>பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளான சாலை, குடிநீர், சிறுபாலங்கள், வடிகால் ஆகிய புனரமைப்பு பணிகளை பொதுநிதியில் இருந்து செய்திட</td>
</tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1. | வார்டு எண். 25, சிதம்பராபுரம் பகுதியில் உள்ள மோட்டார் அறை பழுதடைந்துள்ளதால், அதை இடித்துவிட்டு மறுபடியும் புதிதாக கட்டுதல். | 2.35 | | அனுமதிக்கப் பட்டது. |
| | | 2. | வார்டு எண். 25, சிதம்பராபுரம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் 4" குடிநீர் பைப்லைன் இணைத்தல். | 1.90 | | |
| | | 3. | வார்டு எண். 4, கீழப்பத்தை சின்டெக்ஸ் டேங்க் புதுப்பித்தல் பணி செய்தல். | 0.15 | | |
| | | 4. | வார்டு எண். 14, மூங்கிலடி சின்டெக்ஸ் டேங்க் அமைந்துள்ள பிளாட் பார்ம் பழுது பார்த்தல் பணி. | 0.45 | | |
| | | 5. | வார்டு எண். 19, முஸ்லீம் கீழத்தெரு சின்டெக்ஸ் டேங்க் முதல் பிள்ளைமார் தெரு வரை பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 2.80 | | |
| | | 6. | வார்டு எண். 21, கோவில்பத்து ஆற்றங்கரை தெரு சின்டெக்ஸ் டேங்க் பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 0.90 | | |
| | | 7. | வார்டு எண். 23, சிதம்பராபுரம் உச்சிமகாளி அம்மன் கோவில் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 0.77 | | |
| | | 8. | வார்டு எண். 24, சிதம்பராபுரம் மேலரதவீதி சின்டெக்ஸ் டேங்க் பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 0.79 | | |
| | | 9. | வார்டு எண். 25, சிதம்பராபுரம் நொச்சடி அம்மன் கோவில் அய்யா கோவில் அருகில் கிணறு முதல் பாண்டியாபுரம் தெற்கு தெரு வரை பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 1.20 | | |
| | | 10. | வார்டு எண். 26, காவல் தெரு மற்றும் மேலக்கட்டளை தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி குடிநீர் பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 0.39 | | |
| | | 11. | வார்டு எண். 27, கோவில்பத்து பெரிய தெரு கிணறு முதல் யாதவர் 2வது தெரு விநாயகர் கோவில் அருகில் பைப் லைன் விஸ்தரிப்பு பணி செய்தல் மற்றும் கோவில்பத்து தேவர் தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பைப்லைன் விஸ்தரிப்பு பணி செய்தல். | 2.00 | | |
| | | 12. | வார்டு எண். 5, கீழக்கருவேலன்குளம் மேற்கு தெரு, வார்டு எண். 7, கீழக்கருவேலன்குளம் பள்ளிக்கூடத்தெரு கலையரங்கம் அருகில், வார்டு எண். 22, தோப்பு தெரு மற்றும் வார்டு எண். 12, அம்மன் சன்னதி தெரு ஆகிய தெருக்களில் சின்டெக்ஸ் டேங்க் பழுது சரி செய்தல். | 1.48 | | |
| | | 13. | வார்டு எண். 2, மஞ்சுவிளை மற்றும் வார்டு எண். 13, மூங்கிலடி ஆகிய தெருக்களில் உள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை இடித்து அப்புறப்படுத்துதல். | 1.27 | | |
| | | 14. | வார்டு எண். 17, கலுங்கடி மெயின் ரோடு பாலத்தின் அருகில் வடிகால் அமைத்தல். | 0.69 | | |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>15.</td><td>வார்டு எண். 8, நாகன்குளம் கீழத்தெருவில் உள்ள பழுதடைந்த பாலத்தை புதுப்பித்தல்.</td><td>0.60</td></tr>
<tr><td>16.</td><td>வார்டு எண். 20, பஸ்ஸ்டாண்டு கீழத்தெருவில் கழிவுநீர் வடிகால் கட்டுதல்.</td><td>1.04</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u>
பொதுநிதி திட்டம் 2022–2023ம் ஆண்டுக்கு பொதுமக்கள் மற்றும் நகராட்சி நலன் கருதி தேர்வு செய்த அத்தியாவசிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.22</td>
<td>142</td>
<td>
<u>பொருள் எண். 5</u>
களக்காடு நகராட்சியில் பொது மக்களின் குடிநீர் தேவைக்காக பயன்படுத்தப்பட்டு வரும் சின்டெக்ஸ் டேங்கில் உள்ள மின் மோட்டார்கள், பொது கழிப்பிடங்களில் பயன்படுத்தப்பட்டு வரும் மின் மோட்டார்கள் மற்றும் நகராட்சி நீரேற்று நிலையங்களில் உள்ள மின் மோட்டார்களை பொதுமக்களின் குடிநீர் அவசியத்தை கருத்தில் கொண்டு உடனுக்குடன் நகராட்சியின் ஒப்பந்ததாரர்களை கொண்டு கீழக்கண்ட இடங்களில் உள்ள மின் மோட்டார்கள் சரி செய்யப்பட்டுள்ளது. அதன் விலைப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு. மேலும் அதற்காகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி</th><th>மின் மோட்டார் பழுது நீக்கம் செய்யப்பட்ட இடம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td rowspan="2">சி.வி.என். எலக்ட்ரிக்கல்ஸ் பிளம்பிங் & மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், பணகுடி.</td><td>வார்டு எண். 8, நாகன்குளம் மேலத்தெருவில் உள்ள போரில் 1.0 HP நீர் மூழ்கி மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல்.</td><td>13675.00</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 7, கீழக்கருவேலன்குளம் கீழத்தெருவில் உள்ள மகளிர் சுகாதார வளாகத்தில் உள்ள மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல்.</td><td>12580.00</td></tr>
</table>
</td>
<td>பரிசீலித்து அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3. | சி.வி.என். எலக்ட்ரிக்கல்ஸ் பிளம்பிங் & மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், பணகுடி. | வார்டு எண். 10, சிவசண்முகபுரம் தெருவில் உள்ள மகளிர் சுகாதார வளாக ஆழ்குழாய் போரில் பழுதாகியுள்ள 1" HDPF ஓஸ் கழட்டி புதிய ஓஸ் மாட்டுதல். | 3200.00 | | |
| | | | 4. | | வார்டு எண். 11, பெருமாள் கோவில் தெருவில் உள்ள சின்டெக்ஸ் டேங்கின் போரில் பழுதாகியுள்ள $1^{1/4}$" HDPF ஓஸ் கழட்டி புதிய 1" HDPF ஓஸ் மாட்டுதல். | 2000.00 | | |
| | | | 5. | | வார்டு எண். 3, வடகரை நீரேற்றும் நிலைய உறைகிணறு எண். 2ல் உள்ள 10.0 HP மின் மோட்டார் மற்றும் பம்ப் பழுது நீக்கம் செய்தல். | 28540.00 | | |
| | | | 6. | | வார்டு எண். 12, நகரத்தெருவில் உள்ள மினி டேங்கின் பழுதாகியுள்ள மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 12020.00 | | |
| | | | 7. | ஏ.பி.சிங். எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு. | வார்டு எண். 25, சிதம்பராபுரம் தெற்கு ரதவீதியில் நொச்சடி அம்மன் கோவில் கிணற்றில் பழுதாகியுள்ள மின் மோட்டார் மற்றும் பேனல் போர்டு பழுது நீக்கம் செய்தல். | 17055.00 | | |
| | | | 8. | | வார்டு எண். 15, வளமீட்பு பூங்காவில் உள்ள மினிடேங்கில் பழுதாகியுள்ள மின்மோட்டார், கேபிள் பைப்லைன் பழுது நீக்கம் செய்தல். | 13645.00 | | |

| | | | |
|---|---|---|---|
| 9. | | வார்டு எண். 26, கோவில்பத்து தெற்கு தெருவில் உள்ள பால்பண்ணை அருகில் பழுதாகியுள்ள சின்டெக்ஸ் டேங்க் மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 12915.00 |
| 10. | | வார்டு எண். 27, கோவில்பத்து கிருஷ்ணன் கோவில் தெருவில் பழுதாகியுள்ள மினிடேங்கின் ஸ்டார்ட்டர் பழுது நீக்கம் செய்தல். | 2515.00 |
| 11. | ஏ.பி.சிங். எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு. | வார்டு எண். 22, ஆற்றங்கரை தெருவில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் உள்ள கிணற்றில் பழுதாகியுள்ள 5 HP மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 19980.00 |
| 12. | | சுபத்ரா பூங்காவில் உள்ள கிணற்றில் பழுதாகியுள்ள 5 HP மின்மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 18250.00 |
| 13. | | வார்டு எண். 19, வியாசராஜபுரம் சேனையர் தெருவில் உள்ள மினிடேங்கில் பழுதாகியுள்ள மின் மோட்டார் பழுது நீக்கம் செய்தல். | 9940.00 |

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

நகராட்சியில் பொதுமக்களின் குடிநீர் தேவையினை உடனுக்குடன் நகராட்சியில் ஒப்பந்தம் பெற்றுள்ள நிறுவனங்களை கொண்டு சரி செய்து கொடுத்த வ.எண். 1 முதல் 6 வரையிலான வேலைகளுக்கு தொகை ரூ. 72015/–ஐ சி.வி.என். எலக்ட்ரிக்கல்ஸ் பிளம்பிங் & மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், பணகுடி திரு. ஞானக்கதிரவன் என்பவருக்கும் மற்றும் வ.எண். 7 முதல் 13 வரையிலான வேலைகளுக்கு தொகை ரூ. 94300/–ஐ ஏ.பி.சிங். எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு திரு. ராமகிருஷ்ணன் என்பவர்களின் பில்பட்டியலினை நகராட்சி பணி மேற்பார்வையாளர் மூலம் பார்வையிட்டு பணி முடிவு

<table>
<tr><td></td><td></td><td>சான்று வழங்கப்பட்டுள்ளதால் தொகை வழங்க மன்றம் பரிசீலிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>30.08.22</td><td>143</td><td><u>பொருள் எண். 6</u><br>களக்காடு நகராட்சியில் பொதுமக்களின் அத்தியாவசிய குடிநீர் தேவையினை பூர்த்தி செய்திட குடிநீர் பராமரிப்பிற்கு தேவையான உதிரி பாகங்கள் அவசர தேவைக்காக ஸ்ரீ முத்துலெட்சுமி எலக்ட்ரிக்கல்ஸ், களக்காடு என்ற நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அதற்காகும் செலவு தொகையினை நகராட்சியின் குடிநீர் திட்ட கணக்கிலிருந்து தொகை வழங்கவும், வாங்கப்பட்ட உதிரி பாகங்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>உதிரிபாகங்கள் விபரம்</th><th>எண்ணிக் கை</th><th>விலை</th><th>தொகை</th></tr>
<tr><td>1)</td><td>4 2.5Kg Finolex PVC Pipe 1 Length</td><td>16</td><td>1250</td><td>20000.00</td></tr>
<tr><td>2)</td><td>4 Finolex PVC Tee Lite</td><td>4</td><td>262</td><td>1048.00</td></tr>
<tr><td>3)</td><td>4 Finolex PVC Elbow Lite</td><td>2</td><td>187</td><td>374.00</td></tr>
<tr><td>4)</td><td>3/4*12 GI B Class Pipe Nipple 1</td><td>2</td><td>60</td><td>120.00</td></tr>
<tr><td>5)</td><td>3/4 GI Coupling</td><td>1</td><td>35</td><td>35.00</td></tr>
<tr><td>6)</td><td>3/4 GI Kundra Nalli</td><td>24</td><td>80</td><td>1920.00</td></tr>
<tr><td colspan="4">மொத்தம்</td><td>23497.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>நகராட்சியில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்க 19 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் நீரேற்றம் செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நீரேற்றும் குழாய்கள், குடிநீர் விநியோகிக்கும் குழாய்களில் ஏற்படும் பழுதுகள், பொது நல்லிகள் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் போன்றவற்றிற்கு தேவையான உதிரி பாகங்கள் வாங்கப்பட்டுள்ளது. பொருட்கள் யாவும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலை நிரக்கிற்குட்பட்டுள்ளதின்படி, நகராட்சி பணி மேற்பார்வையாளர் மூலம் பில் பட்டியலில் சான்று பெறப்பட்டதின்படி தொகை வழங்க மன்றம் பரிசீலிக்கலாம்.</td><td>பொதுமக்கள் நலன் கருதி குடிநீர் பழுதுகளை நீக்குவதற்கு தேவையான பொருட்களை உள்ளூர் விலை நிரக்கிற்கு வாங்க அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>30.08.22</td><td>144</td><td><u>பொருள் எண். 7</u><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20789/2021/UPA1, நாள். 03.06.2022ன்படி, களக்காடு நகராட்சி பகுதியில் 2022–2023ம் ஆண்டு சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில், 15.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இரு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. கீழ்கண்ட ஒரு நிறுவனம் மட்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது. அந்நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது அரசு நிர்ணயித்த தொகைக்குட்பட்டுள்ளது. அந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.</td><td>குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த Mirifical Careers Pvt.Ltd., Coimbatore நிறுவனத்தை அங்கீகரிக்கப் பட்டது.</td></tr>
</table>

| வ. எண். | பணியின் விபரம் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி தொகை (நபர் ஒன்றுக்கு) ரூ. |
|---|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையாள அட்டை (ID Card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ் (Certificate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP), விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல். | Mirifical Careers Pvt. Ltd, Coimbatore – 641 045. | 650 |

<u>அலுவலகக்குறிப்பு</u> :

நகராட்சி பகுதிக்குட்பட்ட சாலை மற்றும் தெருவோரங்களில் தள்ளுவண்டிகளில் கடை வைத்து வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளை கணக்கிட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு வியாபாரிகளை கணக்கெடுப்பு பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று அந்நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டு தகுதியான Mirifical Careers Pvt. Ltd, Coimbatore என்ற நிறுவனத்தை தேர்வு செய்யப்பட்டது. அந்நிறுவனத்தின் விலைப்புள்ளியானது அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு கணக்கெடுப்பு செய்து தர தெரிவிக்கப்பட்டுள்ளதால், அந்நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 30.08.22 | 145 | **<u>பொருள் எண். 8</u>**<br><br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்புகள் 2022-2023ம் ஆண்டு களக்காடு நகராட்சிக்கு சிறப்புநிதியாக ரூ. 200.00 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் நகராட்சி அலுவலகத்தில் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் அணை ந.க.எண். 7628/2022/MA1, நாள். 08.06.2022ன்படி, ரூ. 50.00 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சிறப்புநிதி ரூ. 150.00 இலட்சத்திற்கு பணிகள் தேர்வு செய்து அனுப்பிடக் கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 7628/2022/MA1, நாள். 08.06.2022, 29.07.2022 மற்றும் 01.08.2022ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்து உரிய நிர்வாக அனுமதி பெறுவதற்கும், கருத்துரு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்திற்கு கீழ்கண்ட விபரப்படியான பணிகள் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும். | அனுமதிக்கப் பட்டது. |

| வ.எண். | பணியின் பெயர் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | களக்காடு நகராட்சி பகுதி 171002R027-மஞ்சுவிளை தெற்கு தெரு 1, 171005R078-நடராஜர்நகர் நடுத்தெரு வடக்கு, 171007S038-கீழக்கருவேலன்குளம் பள்ளிக்கூடத் தெரு, 171010R153-பாரதிபுரம் மேலத்தெரு வடக்கு, 171016L076-ஞானசம்பந்தபுரம் தெரு 2வது சந்து, 171017L079-மகாத்மா காந்தி வீதி 2வது சந்து, 171018S079-கோட்டை யாதவர் கீழத்தெரு, 171023R280-கிறிஸ்துராஜபுரம் றி.டி.றி.ஏ. பள்ளி தெரு மற்றும் 171008121-கீழக்கருவேலன்குளம் விஸ்வகர்மா தெரு ஆகிய தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 70.50 |
| 2. | களக்காடு நகராட்சி பகுதி 171003R050-மஞ்சுவிளை வடக்கு தெரு கிழக்கு, 171009R133-சிங்கம்பத்து முஸ்லீம் கீழத்தெரு மற்றும் 171009R139-மெயின் ரோடு முஸ்லீம் தெரு ஆகிய தெருக்களில் தார்சாலை அமைத்தல். | 39.00 |
| 3. | களக்காடு நகராட்சி பகுதி வார்டு எண். 13, கக்கன்நகர் அம்மன் கோவில் முன்பு பாலம் மற்றும் தடுப்புசுவர், வார்டு எண். 25, தெற்கு ரதவீதி, கீழரதவீதி மற்றும் மேலரதவீதிகளில் வடிகால், வார்டு எண். 6, புதுக்கிராமம் சாலையில் வடிகால், வார்டு எண். 12, நகரத்தெருவில் பாலம் மற்றும் வடிகால், வார்டு எண். 26, கோவில்பத்து செட்டியார் தெருவில் பாலம் அமைத்தல். | 61.50 |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்புகளில் புதிதாக உருவாக்கப்பட்ட நகராட்சிகளுக்கு சிறப்புநிதியாக ரூ. 200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அறிவிக்கப்பட்டது. அதில் ரூ. 50.00 இலட்சத்திற்கு அலுவலக கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 150.00 இலட்சத்திற்கு பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குனரகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>30.08.22</td>
<td>146</td>
<td>
<u>பொருள் எண். 9</u><br>
களக்காடு நகராட்சி பகுதியில் உள்ள மண்சாலையினை தார்சாலை மற்றும் பேவர் பிளாக் சாலைகளாக மாற்றுவதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 31117/2021/CFC, நாள். 20.06.2022ன்படி 2021–2022ம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத் (Un Tied Grant) திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இப்பணியினை பொதுமக்களின் அவசிய அவசியம் கருதி செய்திட மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>களக்காடு நகராட்சி, கப்பலோட்டிய தமிழன் வடக்கு தெரு மேற்கு பகுதியில் தார்சாலை அமைத்தல்.</td><td>27.20</td></tr>
<tr><td>2.</td><td>களக்காடு நகராட்சி, மூங்கிலடி காமராஜ் நகர் சுடுகாடு செல்லும் சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td>5.60</td></tr>
<tr><td>3.</td><td>களக்காடு நகராட்சி, மூங்கிலடி காமராஜ் நகர் 1வது தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல்.</td><td>6.15</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
15வது நிதிக்குழு மானியத் திட்டத்தின் மூலம் பணிகள் செய்ய நிர்வாக அனுமதி பெற்று, மண்டல பொறியாளர் அவர்களிடம் மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெற்று பணிகள் செய்வதற்கு வரும் 09.09.2022 பிற்பகல் 3.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளிகள் வழங்க நகராட்சி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் தகவலுக்கு.
</td>
<td>பார்வையிடப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>30.08.22</td>
<td>147</td>
<td>
<u>பொருள் எண். 10</u><br>
களக்காடு நகராட்சியில் 2022–2023 ஆம் ஆண்டு நடைபெற்று வரும் அனைத்து வகையான திட்டப்பணிகளை பொதுமக்கள் அறியும் வண்ணம் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு விளம்பரம் செய்வதற்கும், அரசு அனுமதி அளித்துள்ள செய்தி தாள்களான தமிழ் முரசு, தினகரன், தினத்தந்தி மற்றும் மாலை மலர் மற்றும் தமிழக அரசின் ஓராண்டு சாதனை புத்தகத்தில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விளம்பரம் செய்த வகைக்கு கீழ்கண்ட விபரப்படி தொகை வழங்கவும், அதற்காகும் செலவு தொகையினை பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் பரிசீலனைக்கு.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நாளிதழ் விபரம்</th><th>விளம்பரம் செய்த நாள்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>தமிழ்முரசு,<br>கல் பப்ளிகேஷன்<br>பிரைவேட் லிமிடெட்,<br>திருநெல்வேலி.</td><td>07.05.2022</td><td>9765.00</td></tr>
<tr><td>2.</td><td>தினகரன்,<br>கல் பப்ளிகேஷன்<br>பிரைவேட் லிமிடெட்,<br>திருநெல்வேலி.</td><td>25.05.2022</td><td>9563.40</td></tr>
<tr><td>3.</td><td>தினத்தந்தி,<br>தந்தி டிரஸ்ட்,<br>திருநெல்வேலி.</td><td>25.06.2022</td><td>23688.00</td></tr>
<tr><td>4.</td><td>மாலைமலர்,<br>மலர் பப்ளிகேஷன்<br>பிரைவேட் லிமிடெட்,<br>திருநெல்வேலி.</td><td>31.05.2022</td><td>18900.00</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
நகராட்சியில் நடைபெற்று வரும் பணிகள் குறித்த விபரங்களை அரசு அனுமதி அளித்துள்ள செய்திதாள்களில் விளம்பரம் செய்த வகைக்கு பொதுநிதியிலிருந்து தொகை வழங்க மன்றம் பரிசீலிக்கலாம்.
</td>
<td>பரிசீலித்து அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
<tr>
<td>30.08.22</td>
<td>148</td>
<td>
<u>பொருள் எண். 11</u><br>
களக்காடு நகராட்சி வார்டு எண். 1 முதல் 27 வரை பொதுமக்களின் அடிப்படை அத்தியாவசிய பணிகளை பொதுநிதியிலிருந்து செலவிட நகர் மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களின் கோரிக்கையின்படி, கீழ்கண்ட பணிகள் செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கு அங்கீகாரத்திற்கும்.
<table>
<tr><td>1.</td><td>வார்டு எண். 1, அம்பேத்கார் நகரில் உள்ள பழுதான போரை மாற்றி புதிய போர் அமைத்தல்.</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு எண். 27, கோவில்பத்து யாதவர் தெருவில் உள்ள பழுதடைந்த சின்டெக்ஸ் டேங்க் ஆழ்துளை கிணற்றை மாற்றி புதிய போர் அமைத்தல்.</td></tr>
</table>
</td>
<td>அங்கீகரிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>3.</td><td>வார்டு எண். 16, கூட்டுறவு சங்கம் அருகில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்.</td></tr>
<tr><td>4.</td><td>வார்டு எண். 22, சுபாஷ் சந்திரபோஸ்புரம் அருகில் உள்ள பொதுக் கழிப்பிடத்தை சரி செய்தல்.</td></tr>
<tr><td>5.</td><td>வார்டு எண். 18ல் புதிதாக போர் அமைத்தல்.</td></tr>
<tr><td>6.</td><td>வார்டு எண். 10, உச்சிமகாளி அம்மன் கோவில் அருகில் தெருவிளக்கு அமைத்தல்.</td></tr>
<tr><td>7.</td><td>வார்டு எண். 6ல், புதிதாக போர் அமைத்தல்.</td></tr>
<tr><td>8.</td><td>வார்டு எண். 7, பள்ளிக்கூடத் தெரு அருகில் சிறுபாலம் அமைத்தல்.</td></tr>
<tr><td>9.</td><td>வார்டு எண். 5ல், சின்டெக்ஸ் டேங்க் பைப் லைன் அமைத்தல்.</td></tr>
<tr><td>10.</td><td>வார்டு எண். 21, கோவில்பத்து வடக்கு தெருவில் உள்ள சின்டெக்ஸ் டேங்கிலிருந்து இரண்டு பொது நல்லிகள் அமைத்தல்.</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
களக்காடு நகராட்சி 1 முதல் 27 வரையிலான வார்டுகளில் பொதுமக்களின் அத்தியாவசிய பணிகளான குடிநீர், பாலம் மற்றும் பொது சுகாதார பணிகளை செய்திடவும், அதற்கான செலவு தொகையினை பொதுநிதியிலிருந்து செலவழித்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td>30.08.22</td><td>149</td><td>
<u>பொருள் எண். 12</u><br>
களக்காடு நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்ய நிதித் திட்டத்தின் கீழ் பணிகள் செய்வதற்காக 2021–2022ம் ஆண்டுக்கான Tied மானியம் இந்நகராட்சி முன்பு பேரூராட்சியாக இருந்தபோது பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 7207/2022/உ2, நாள். 05.10.2021ன்படி மானியத் தொகையானது கணினி தொழில்நுட்ப பின்னடைவு காரணமாக தவறுதலாக ஆய்க்குடி பேரூராட்சிக்கு மாற்றி அனுப்பப்பட்டுள்ளது. அத்தொகையினை பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 3415/2022/ப1, நாள். 11.08.2022ன்படி தொகையானது நகராட்சி வங்கி கணக்கிற்கு வரவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் ஆகிய திட்டப்பணிகளில் பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும்.<br>
<u>அலுவலகக்குறிப்பு :</u><br>
2021–2022ம் ஆண்டிற்கான 15வது மத்திய நிதிக்குழு மானிய நிதி திட்டத்தில் பணிகள் செய்வதற்கு தொகை ரூ. 2015332/– ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட தொகையானது தவறுதலாக ஆய்க்குடி பேரூராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்தொகை மீள நகராட்சி வங்கி கணக்கிற்கு வரவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 50% திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கும், மீதி 50% குடிநீர் திட்டப் பணிக்கும் செலவிட தகுந்த பணிகளை தேர்வு செய்து நிர்வாக அனுமதி பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td>பார்வையிடப்பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 30.08.22 | 150 | **<u>பொருள் எண். 13</u>**<br><br>தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 24B, 24Hன்படி களக்காடு நகராட்சியில் வார்டு குழு மற்றும் பகுதி சபா குழு உருவாக்குவதற்கு அரசாணை நிலை எண். 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 24.06.2022ல் குழு உருவாக்குவதற்கும் மற்றும் அரசாணை நிலை எண். 93, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 24.06.2022ல் குழு செயலர் நியமிப்பது குறித்து ஆணை வெளியிடப்பட்டதின் அடிப்படையில், வார்டு குழு மற்றும் பகுதி சபா குழு ஏற்படுத்திட மன்றத்தின் தகவலுக்கும், அனுமதிக்கும்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>அரசாணை எண். 92 மற்றும் 93ன்படி வார்டு குழு மற்றும் பகுதி சபா குழு அமைத்திட மன்றம் அனுமதிக்கலாம். | பார்வையிட்டு அனுமதிக்கப் பட்டது. |
| 30.08.22 | 151 | **<u>பொருள் எண். 14</u>**<br><br>2022–2023ம் ஆண்டிற்கான 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் Tied Grant (வரையறுக்கப்பட்ட பணிகளுக்கான மானியம்) திட்டம் மற்றும் Un Tied Grant (வரையறுக்கப்படாத பணிகள்) தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்ய திட்டப் பிரேரணை தயார் செய்து பணிகள் விபரம் மதிப்பீடுடன் நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் சரிபார்ப்பதற்கு சமர்ப்பிக்க பணிகள் தேர்வு செய்து தர கோரப்பட்டதின்படி, மன்றம் பணிகளினை 15வது நிதிக்கு மானிய வழிகாட்டுதல்படி தேர்வு செய்ய மன்றம் பரிசீலித்தல்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>வரையறுக்கப்பட்ட தலைப்பிற்கான (Tied Grant) மானிய திட்டத்தில் ரூ. 62.00 லட்சங்கள் ஒதுக்கீடு செய்து வரப்பட்டுள்ளது. மேற்படி திட்ட வழிகாட்டு நெறிமுறைப்படி 50% குடிநீர் திட்ட பணிக்கும், 50% திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிக்கும் தேர்வு செய்ய தெரிவிக்கப்பட்டதின்படி பணிகள் தேர்வு செய்யலாம். இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் 2021–2022ம் வருட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இரண்டு நுண் உரக்குடில் அமைக்க (MCC) வேலைக்கு ரூ. 57.50 இலட்ச மதிப்பீடு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதில், திட்ட நிதி போக மீதமுள்ள தேவைப்படும் நிதியினை ரூ. 32.50 இலட்சம் 2022–2023ம் வருட 15வது நிதிக்குழு மானிய திட்டத்தில் சேர்த்து கொள்ள முடிவு செய்யப்பட்டதின்படி ரூ. 90.00 இலட்சம் நுண் உரக்குடில் அமைக்கும் பணிக்கு இந்த திட்ட நிதியில் ஈடு செய்ய அனுமதிக்கலாம். வரையறுக்கப்படாத தலைப்பு (Un Tied Grant)ன் கீழ் சம்பளம் மற்றும் நிர்வாக செலவுகள் தவிர்த்து இதர பணிகள் மேற்படி தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 41.00 இலட்சத்தில் இதர பணிகள் தேர்வு செய்து கொள்ளலாம். | பரிசீலித்து அனுமதிக்கப் பட்டது. |